தின கனி காலை நாளிதழ்

மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை

Call : 044-2272060 9443699066

admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்

கனி பிரின்டிங்

DTP

நாளிதழ் வார இதழ் மாத இதழ்

சிறந்த முறையில் (DTP)செய்து தரப்படும்

நாளிதழ் மந்திரில் மேகஸின் குறைந்த விலையில் பிரின்டிங் செய்து தரப்படும்

தொடர்புக்கு : 94436 99066

மலர்:03 இதழ்:268 4 பக்கங்கள் 26:04:2026 ஞாயிற்றுக்கிழமை விலை ரூ,6 வருடசந்தாரூ,1825



தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்.

**விளக்கம்:** தவ வலிமையால் தன்னுடைய உயிர், தான் என்னும் பற்று நீங்கப் பெற்றவனை மற்ற உயிர்கள் எல்லாம் (அவனுடைய பெருமையை உணர்ந்து) தொழும்.

## பாஜகவில் இணைந்ததால் இன்ஸ்டாவில் 10 லட்சம் ஃபாலோயர்களை இழந்த ராகவ் சத்தா



புது டெல்லி: ஏப்,26

ஆம் ஆத்மி கட்சியிலிருந்து விலகி பாஜகவில் இணைந்த மாநிலங்களவை எம்.பி ராகவ் சத்தா கடந்த 24 மணி நேரத்திற்குள் இன்ஸ்டாகிராமில் 10 லட்சம் ஃபாலோயர்களை இழந்துள்ளார்.ஆம் ஆத்மி கட்சியின்ஆறு மாநிலங்களவை எம்.பிக்களுடன் ராகவ் சத்தா ஆம் ஆத்மி கட்சியிலிருந்து விலகி பாஜகவில் இணைந்த நிலையில், சமூக ஊடகத்தில் அவரின் செல்வாக்கு சரிந்துள்ளதாக தெரிகிறது. சில வாரங்களுக்கு முன்பு ஆம் ஆத்மி கட்சியின் ராஜ்யசபா துணைத் தலைவர் பதவியிலிருந்து ராகவ் சத்தா நீக்கப்பட்ட பிறகு, நேற்று அவர் பாஜகவில் இணைந்தார். அவரின் இந்த அரசியல் நிலைப்பாடு ஜென்ஸி தலைமுறையினரைக் கவரவில்லை என்று தெரிகிறது.ராகவ் சத்தா பாஜகவில் இணைந்த 24 மணி நேரத்திற்குள் இன்ஸ்டாகிராமில் சுமார் பத்து லட்சம் ஃபாலோயர்களை இழந்துள்ளார். வெள்ளிக்கிழமை அன்று, இன்ஸ்டாகிராமில் ராகவ் சத்தாவிற்கு 1.46 கோடி ஃபாலோயர்கள் இருந்தனர். சனிக்கிழமை மதியம் 1 மணிக்கு, அவரது ஃபாலோயர்களின் எண்ணிக்கை 1.35 கோடியாகக் குறைந்தது.ராகவ் சத்தாவுக்கு எதிராக இன்ஸ்டாகிராமில் 'பின்தொடர்வதை நிறுத்து' என ஜென் ஸி தலைமுறையினர் மேற்கொண்ட பிரச்சாரம், 24 மணி நேரத்தில் அவரின் பின் தொடர்பவர்களின் எண்ணிக்கை 10 லட்சம் குறைய வழிவகுத்துள்ளது என்று என்சிபி (எஸ்பி) செய்தித் தொடர்பாளர் அனிஷ் கவாண்டே ட்வீட் செய்துள்ளார். "இணையம் ஒரே இரவில் உங்களை ஒரு கதாநாயகனாக மாற்ற முடியும். அதே இணையம் ஒரே இரவில் உங்களை பூஜ்ஜியத்திற்கும் கொண்டு செல்ல முடியும்" என்று அவர் கூறினார்."unfollowRaghavChadha" என்ற ஹேஷ்டேக் சமூக ஊடகங்கள் வேகமாக பகிரப்பட்டு வருகிறது. இந்தச் சூழலில், பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பாஜகவை விமர்சிக்கும் தனது பழைய பதிவுகளை ராகவ் சத்தா நீக்கிவிட்டதாகவும் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## பவானிபூரில் மம்தா - சுவேந்து கடும் போட்டி



கொல்கத்தா: ஏப்,26

கடந்த 2011-ம் ஆண்டு முதல் பவானிபூர் முதல்வர் மம்தாவின் தொகுதியாக உள்ளது. இங்கு வரும் 29-ம் தேதி 2-ம் கட்ட தேர்தல் நடைபெற உள்ளது. இத்தொகுதியில் மம்தா எதிர்க்கட்சி தலைவர் சுவேந்து இடையே கடும் போட்டி நிலவுகிறது. திரிணாமுல் காங்கிரஸ் உருவாவதற்கு முன்பு, கம்யூனிஸ்ட் ஆட்சிக் காலத்திலும் இது காங்கிரஸின் கோட்டையாக இருந்தது. பல்வேறு சமூக மக்கள் வாழும் இந்தத் தொகுதியில் மம்தா நடைப் பயணம் மேற்கொண்டு பிரச்சாரம் செய்து வருகிறார். இதே தொகுதியில்தான் மம்தா பானர்ஜியின் வீடும் உள்ளது.இங்குள்ள பள்ளி, அசுதோஷ் கல்லூரியில்தான் மம்தா படித்து மாணவர் பருவத்தில் அரசியலில் ஈடுபட்டு பல போராட்டங்களை நடத்தியுள்ளார். அதனால் இத் தொகுதி மக்கள் மம்தாவை உள்ளூர் வாசியாக பார்க்கின்றனர் என அசுதோஷ் கல்லூரி அருகே உணவகத்தில் பணியாற்றும் 80 வயது அமோல் என்பவர் கூறுகிறார்.இங்கு மம்தாவை எதிர்த்து போட்டியிடும் சுவேந்து அதிகாரி நந்திகிராமைச் சேர்ந்தவர். இதனால் அவர் இங்கு வெளிநபராக கருதப்படுகிறார். கடந்த 2021-ல் நந்திகிராமில் மம்தாவை தோற்கடித்த சுவேந்து அதிகாரி, இப்போது மம்தாவின் சொந்த மண்ணில் அவரை வீழ்த்தினால், அது பாஜக.வுக்கு மிகப்பெரிய வெற்றியாக இருக்கும்.ஆனால், இங்கு, அவர் மம்தாவை எளிதாக வீழ்த்த முடியாது என சிலர் கூறுகின்றனர். ஆனால், வங்காள மொழி பேசாத மக்கள் இங்கு அதிகம் வசிக்கின்றனர். அவர்கள் மம்தாவின் கொள்கைகளுக்கு எதிராக தற்போது கருத்து தெரிவிக்கின்றனர். மேற்குவங்கத்தில் நிலவும் ஊழல், சட்டம் ஒழுங்கு, பொருளாதார மந்த நிலை, ஊடுருவல், கொல்கத்தா சந்தையில் முஸ்லிம்களின் ஆதிக்கம் ஆகியவை குறித்து மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். பக்ரி சந்தையில் தொழில் செய்த குஜராத்திகள் பலர் வெளியேறினர், அகமதாபாத் மற்றும் மும்பை ஆகிய நகரங்களுக்கு சென்று விட்டனர். இங்கு சிலர் மம்தாவுக்கு ஆதரவாக பேசுகின்றனர். சிலர் மாற்றம் வேண்டும் என்கின்றனர்.

## உக்ரைன் போரில் 10 இந்தியர்கள் உயிரிழப்பு: உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தகவல்



புதுடெல்லி: ஏப்,26

உக்ரைன் போரில் 10 இந்தியர்கள் உயிரிழந்து இருப்பதாகவும் பலர் விருப்பப்பட்டு சென்றதாகவும் உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தகவல் தெரிவித்துள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக ரஷ்யாவில் வசிக்கும் திவ்யா தாக்கல் செய்த பொதுநல மனுவில் கூறப்பட்டுள்ளதாவது: 26 இந்தியர்கள் சுற்றுலா பயணிகளாகவும், படிக்கவும் ரஷ்யாவுக்கு கடந்த ஆண்டு செப்டம்பர், அக்டோபரில் சென்றனர். வேலைவாய்ப்பு வழங்குவதாக அழைக்கப்பட்ட அவர்களின் பாஸ்போர்ட், அடையாள ஆவணங்கள் பறிக்கப்பட்டு, மிரட்டி உக்ரைனுடனான போரில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.அவர்களை கண்டறிந்து தாயகம் அனுப்பி வைக்கும் நடவடிக்கையை எடுக்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. இந்த பொதுநல மனு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு நேற்று விசாரித்தது.அப்போது மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஐஸ்வர்யா பாட்டி தாக்கல் செய்த மனுவில் "26 நபர்களில் 10 பேர் உக்ரைன் உடனான போரில் உயிரிழந்து இருப்பதாகவும், உயிரிழந்தோரின் குடும்பங்களுடன்வெளியுறவுத்துறை அமைச்சகம் தொடர்பில்இருப்பதாகவும், உக்ரைன் உடனான போரில் பலர் விருப்பப்பட்டு சென்றிருப்பதாகவும், சில ஏஜெண்டுகள் தவறாக வழி நடத்தி இருக்க கூடிய சம்பவங்களும் இருப்பதாகவும், ரஷ்யாவுக்கு 215 இந்தியர்கள் சென்றிருப்பதாகவும்" தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த விவகாரத்தில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை நிலை அறிக்கை தாக்கல் செய்ய வெளியுறவு அமைச்சகத்துக்கு உத்தரவிட்டு விசாரணையை உச்ச நீதிமன்றம் தள்ளி வைத்துள்ளது.

# முதல்வர் ஸ்டாலினுக்கு கொடைக்கானலில் உற்சாக வரவேற்பு: ஓய்வெடுப்பதற்காக குடும்பத்தினருடன் வருகை





கொடைக்கானல்: ஏப்,26

ஓய்வெடுப்பதற்காக குடும்பத்தினருடன் கொடைக்கானலுக்கு வந்துள்ள முதல்வர் ஸ்டாலினுக்கு திமுகவினர், பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். முதல்வர் வருகையை முன்னிட்டு கொடைக்கானலில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு கடந்த 23-ம் தேதி முடிவடைந்தது. வாக்கு எண்ணிக்கை மே 4-ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தலையொட்டி, முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக பல்வேறு மாவட்டங்களுக்கும் தொடர்ச்சியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு, தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார். தற்போது வாக்குப்பதிவு முடிவடைந்த நிலையில், குடும்பத்தினருடன் கொடைக்கானலில் 5 நாட்கள் ஓய்வெடுக்க உள்ளார். சென்னையில் இருந்து முதல்வர் ஸ்டாலின், தனது மனைவி, மகள், பேரன், பேத்தி உள்ளிட்ட குடும்பத்தினருடன் நேற்று காலை தனி விமானத்தில் புறப்பட்டு மதுரைக்கு வந்தார். அங்கிருந்து காரில் பிற்பகல் 2.45 மணிக்கு கொடைக்கானல் வந்தடைந்தார். வழிநெடுகிலும் சாலையோரம் திரண்ட திமுகவினர், பொதுமக்கள் முதல்வரை உற்சாகத்துடன் வரவேற்றனர். அவர்களை பார்த்து கையசைத்தபடி முதல்வர் ஸ்டாலின் சென்றார்.

கொடைக்கானல் - வத்தலக்குண்டு காட் ரோடு, பெருமாள்மலை, மூஞ்சிக்கல் ஆகிய இடங்களில் காத்திருந்த கட்சி நிர்வாகிகள் அவருக்கு புத்தகங்கள், சால்வையை வழங்கி வரவேற்றனர். பின்னர், கொடைக்கானல் வந்த முதல்வர் ஸ்டாலின், பாம்பார்புரம் பகுதியில் உள்ள தனியார் விடுதியில் குடும்பத்துடன் தங்கி ஓய்வெடுத்து வருகிறார். விடுதியில் அவரைப் பார்க்க கட்சியினர், முக்கிய பிரமுகர்கள் யாருக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை. 29-ம் தேதி வரை இங்கு தங்கும் முதல்வர் 30-ம் தேதி சென்னை திரும்ப உள்ளார்.முதல்வர் வருகையையொட்டி கொடைக்கானலில் ஏராளமான போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். கொடைக்கானல் மலைப் பகுதியில் 30-ம் தேதி வரை ட்ரோன்கள் (ஆளில்லா விமானங்கள்) பறக்க தடை விதித்து மாவட்ட ஆட்சியர் சரவணன் உத்தரவிட்டுள்ளார். அதே நேரம், சுற்றுலா பயணிகளுக்கு எந்தவித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை.முதல்வர் தினமும் காலையில் விடுதி வளாகம் அல்லது நட்சத்திர ஏரி பகுதியில் நடைபயிற்சி மேற்கொள்ள உள்ளார். அடுத்த 2 நாட்கள் விடுதியிலேயே தங்கி ஓய்வெடுக்கிறார். பின்னர், மன்னவனூரில் உள்ள சூழல் சுற்றுலா மையம், செம்மறி ஆடு ரோம ஆராய்ச்சி மையம், கொடைக்கானல் சூரிய ஆராய்ச்சிக் கூடம், ரோஜா பூங்கா உள்ளிட்ட இடங்களை அடுத்தடுத்த நாட்களில் பார்வையிட உள்ளார். நட்சத்திர ஏரியில் படகு சவாரி, ஏரிச் சாலையில் சைக்கிளிங் செல்ல உள்ளார். முதல்வரின் மனைவி துர்கா ஸ்டாலின், கொடைக்கானலில் உள்ள குறிஞ்சியாண்டவர் கோயில், பூம்பாறை குழந்தை வேலப்பர் கோயிலில் சிறப்பு வழிபாடு நடத்த உள்ளார். சென்னை திரும்புவதற்கு முன்பு திண்டுக்கல் மாவட்ட அமைச்சர்கள், முக்கிய நிர்வாகிகளை முதல்வர் சந்திப்பார் என்று திமுக வட்டாரத்தில் கூறப்படுகிறது.கடந்த 2021 பேரவைத் தேர்தல் மற்றும் 2024 மக்களவைத் தேர்தல் முடிந்த பிறகும், ஸ்டாலின் குடும்பத்தினருடன் கொடைக்கானலுக்கு வந்து ஓய்வெடுத்தார். அந்த தேர்தல்களில் திமுக கூட்டணி வெற்றி பெற்றது. அந்த சென்டிமென்ட் காரணமாகவே தற்போதும் அவர் கொடைக்கானல் வந்துள்ளதாக கட்சியினர் தெரிவித்தனர். வெற்றிச் சின்னம் காட்டிய முதல்வர்: சென்னையில் இருந்து மதுரை விமான நிலையம் வந்த முதல்வர் ஸ்டாலினிடம் சட்டப்பேரவைத் தேர்தல் வெற்றி வாய்ப்பு குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர், கட்டைவிரலை உயர்த்தி வெற்றிச் சின்னம் காட்டினார். தேர்தலுக்கு முன்பாக, கடந்த மாதம் காங்கிரஸ் கட்சியுடன் தொகுதிப் பங்கீடு உடன்பாடு ஏற்பட்டபோது 'வெற்றிகரமாக முடிந்தது' என்பதற்கு அடையாளமாக முதல்வர் ஸ்டாலின் சைகை காட்டியது வலைதளங்களில் வேகமாக பரவியது. அதே போல, முதல்வர் நேற்று வெற்றிச் சின்னம்காட்டியதும் வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

## பேக்கர் ஹியூஸ் நிறுவனத்திற்காக பிரத்யேக லீன் உற்பத்தி ஆலையை ஆசாத் இன்ஜினியரிங் திறந்து வைத்தது




துல்லியப் பொறியியலில் முன்னணியில் இருக்கும் ஆசாத் இன்ஜினியரிங், ஹைதராபாத், துனிகிபொல்லாரத்தில் உள்ள தனது சிறப்பு மையத்தில் 7,600 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட அடுத்த தலைமுறை லீன் உற்பத்தி ஆலையைத் திறந்து வைத்து மற்றொரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது. இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில், ஆசாத் இன்ஜினியரிங் நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி ராகேஷ் சோப்தார் கூறியதாவது: "பேக்கர் ஹியூஸ் உடனான எங்களின் எட்டு ஆண்டு காலப் பயணத்தில், இந்த பிரத்யேகமான லீன் உற்பத்தி ஆலையின் தொடக்க விழா ஒரு முக்கிய மைல்கல்லாகும். நாங்கள் இதுவரை மேற்கொண்டதிலேயே மிகவும் கடுமையான தகுதி நிர்ணயப் பாதைகளில் ஒன்றின் மூலம் 2018-ல் இந்தப் பங்களிப்பு தொடங்கியது. எரிவாயு மற்றும் நீராவி விசையாழிகளின் இறுதி நிலைகளுக்கான முக்கியமான சுழலும் ஏர்ஃபாயில்களை வழங்குவதில் பேக்கர் ஹியூஸ் உடனான எங்கள் பயணம் தொடங்கியது. அது பின்னர், தொழில்துறை மற்றும் எரிசக்தி தொழில்நுட்ப வணிகத்திற்கான ஒரு ஆழமான, மூலோபாயப் பங்களிப்பாக வளர்ந்துள்ளது. ஹைதராபாத்தில் உள்ள துனிகிபொல்லாரத்தில் அமைந்துள்ள எங்களின் சிறப்பு மையத்தில் உள்ள இந்த 7,600 சதுர மீட்டர் ஆலை, பேக்கர் ஹியூஸுக்காக பிரத்தியேகமாக, நிறுவனத்திற்குள்ளேயே சிறப்புச் செயல்முறைத் திறன்களுடன் கூடிய ஒரு பிரத்யேகமான, உலகத் தரம் வாய்ந்த உற்பத்தி ஆலையை உருவாக்கும் எங்களின் திட்டமிட்ட உத்தியின் ஒரு பகுதியாகும் என்றார்.

## BMW F 450 GS இந்தியாவில் அறிமுகம் உலகமே உங்கள் விளையாட்டு மைதானம்




BMW மோட்டாராட் இந்தியா (BMW Motorrad India) BMW F 450 GS மாடலை இந்தியாவில் அறிமுகப்படுத்தியது. ஜெர்மனியில் உள்ள BMW மோட்டாராட் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு BMW F 450 GS, இந்தியாவில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படவுள்ளது.BMW குரூப் இந்தியாவின் தலைவரும் சி.இ.ஓ-வுமான ஹர்தீப் சிங் பிரார் கூறுகையில், "GS பாரம்பரியத்தில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கும் வகையில், புதிய தலைமுறை சாகசப் பயணிகளுக்காக BMW F 450 GS உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் மாறுபட்ட சாலைகள் மற்றும் ஓட்டுநர் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, புகழ்பெற்ற GS வடிவமைப்பு, முன்மாதிரியான செயல்திறன் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்து இந்த பிரீமியம் மாடல் உருவாக்கப்பட்டுள்ளத. நகர வீதிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சாலைகள் இல்லாத திறந்த வெளிகளில் ஓட்டும்போது அதிக நம்பிக்கையை அளிக்கிறது. இன்னும் அதிக அளவிலான ஓட்டுநர்களை சாகசத்தின் சிலிர்ப்பைத் தழுவச் செய்வதும், இந்தியாவின் வளர்ந்து வரும் மோட்டார்சைக்கிள் கலாச்சாரத்தில் முக்கிய பங்கு வகிக்கச் செய்வதும் எங்களது நோக்கமாகும். BMW மோட்டாராட் நிறுவனத்திற்கு ஒரு முக்கியமான வளர்ச்சிச் சந்தையாக இந்தியா இருக்கிறது. என்று கூறினார்.

## நடிகர் புகழ் சென்னையில் 'துபாய் கருப்பொருளிலான "துபாய் சம்மர் கார்னிவல் 2026"-ஐத் தொடங்கி வைத்தார்




மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட 'துபாய் சம்மர் கார்னிவல் 2026 , சென்னை மதுரவாயல் , நொளம்பூர், அருகிலுள்ள NH பைபாஸ் சாலையில் திறப்பு விழா நடைபெற்றது. பிரபல நகைச்சுவை நடிகரும் புகழ் இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடங்கி வைத்தார். மேலும் சர்வதேச தரத்திலான ஒரு கார்னிவல் அனுபவத்தைச் சென்னைக்குக் கொண்டுவந்த இம்முயற்சியைப் பெரிதும் பாராட்டினார்.'"வி ஒன் எண்டர்டெயின்மென்ட் ". நிறுவனத்துடன் இணைந்து மிஷி குரூப் ஆஃப் கம்பெனி ஏற்பாடு செய்துள்ள இக்கார்னிவல், துபாயின் துடிப்பான உணர்வை அதன் பிரம்மாண்டமான அலங்காரங்கள் கருப்பொருள் சார்ந்த மண்டலங்கள் மற்றும் பெரிய அளவிலான பொழுதுபோக்கு அம்சங்கள் வாயிலாகச் சென்னையில் அப்படியே கண்முன்னே நிறுத்துகிறது. இங்குள்ள 'மாயாஜால் துபாய் நீர்வீழ்ச்சிகள் இதன் தனித்துவமான சிறப்பம்சமாகத் திகழ்ந்து பார்வையாளர்களுக்குக் கண்கவர் காட்சிகளை விருந்தாக அளிக்கிறது. இங்கு Dubai Waterfalls Snow World) அனுபவங்களுடன்Avatar திரைப்படக் பிரத்யேக மண்டலம், Horror Houseகேளிக்கை சவாரிகள் மற்றும் கார்னிவல் விளையாட்டுகள்ஷாப்பிங் ஸ்டால்கள் என வியப்பூட்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகமிஷி குரூப் ஆஃப் கம்பெனியின் நிர்வாக இயக்குனர் பார்சன் சந்த் துகர்ஜெயச்சந்திரன் டெக்ஸ்டெயில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஜெ. சுந்தரலிங்கம் சலானி ஜூவல்லரி மார்ட் தலைமை நிர்வாகி வரதராஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.இதுகுறித்து பார்சன் சந்த் துகர் கூறியதாவது: "துபாயின் கொண்டாட்ட உணர்வைச் சென்னைக்குக் கொண்டுவரும் ஒரு தளமாகவே துபாய் சம்மர் கார்னிவல் வடிவமைக்கப்பட்டுள்ளது. குடும்பங்கள் அனைத்தும் இச்சூழலில் பொழுதுபோக்கு மற்றும் ஷாப்பிங் அனுபவத்தை பெற இதை உருவாக்கி உள்ளோம். என்றார்."நடிகர் புகழ் கூறியதாவது :- "இத்தகைய ஒரு பிரம்மாண்டமான முன்னெடுப்பின் ஒரு பகுதியாக இருப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. அனைவரும் தங்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் இணைந்து இந்த உற்சாகமான கார்னிவல் அனுபவத்தை நேரில் வந்து கண்டு மகிழுமாறு நான் அன்புடன் அழைக்கிறேன்." என்றார்.




திருவாரூர் மாவட்டத்தில் வாக்கு எண்ணும் மையமான திரு.வி.க.அரசு கலை கல்லூரியில் நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் தேர்தல் முடிவுற்று, வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைப்பறையில் வைக்கப்பட்டு வைப்பறையினை திருவாரூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.மோகனச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள், 168.திருவாரூர் மற்றும் 169. நன்னிலம் சட்டமன்றப் பேரவை தேர்தல் பொது பார்வையாளர் திரு. அஜய் யாதவ், இ.ஆ.ப., அவர்கள், 166. திருத்துறைப்பூண்டி மற்றும் 167. மன்னார்குடி சட்டமன்றப் பேரவை தேர்தல் பொது பார்வையாளர் திருமதி. டி.வி.அனுபமா, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் முன்னிலையில் சீல் வைத்தனர். கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர் செல்வி.பல்லவி வர்மா, இ.ஆ.ப., அவர்கள், திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.யு.கருண்கரட், இ.கா.ப., அவர்கள் உடனிருந்தனர்.

புதுச்சேரியில் பெண்களுக்கான 33% இட ஒதுக்கீடு மசோதாவை பாராளுமன்றத்தில் எதிர்த்த

# திமுக மற்றும் காங்கிரஸ் உள்ளிட்ட இந்தி கூட்டணியை கண்டித்து மாபெரும் பேரணி



புதுச்சேரி, ஏப்.26

புதுச்சேரி பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக, பெண்களுக்கான 33% இடஒதுக்கீடு மசோதாவை பாராளுமன்றத்தில் எதிர்த்த திமுக, காங்கிரஸ் மற்றும் இந்தி கூட்டணியை கண்டித்து, சுதேசி மில் முதல் பழைய பேருந்து நிலையம் வரை மாபெரும் பேரணி நடைபெற்றது.

இந்த பேரணிக்கு மாநிலத் தலைவர் வி.பி. ராமலிங்கம் தலைமை தாங்கினார். உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் மற்றும் சட்டப்பேரவைத் தலைவர் ஏம்பலம் செல்வம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். மாநில மகளிர் அணி தலைவி தாமரைச்செல்வி, மகளிர் அணி பொறுப்பாளர் ஜெயந்தி, மாநில துணைத் தலைவி ஜெயலட்சுமி மற்றும் ஆடலரசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும், மாநில பொதுச் செயலாளர்கள் மோகன் குமார், லட்சுமி நாராயணன், சட்டமன்ற உறுப்பினர்கள் செல்வம், தீப்பாய்ந்தான், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் அசோக் பாபு, தங்க விக்ரமன், மாநில துணைத் தலைவர்கள் பாஸ்கர், அமாவசை, பழனி, மாநில பொருளாளர் ராஜகணபதி ஆகியோர் கலந்து கொண்டனர். அத்துடன், அணி தலைவர்கள் பாரதி மோகன், கோவேந்தன், வில்லியனூர் மாவட்ட பொறுப்பாளர் வெற்றிச்செல்வம், மாவட்டத் தலைவர்கள் உலகநாதன், கிருஷ்ணராஜ், அனிதா, சுகுமார், முருகதாஸ், ஊடகத்துறை தலைவர் நாகேஸ்வரன், சமூக ஊடகத் தலைவர் கார்த்திகேயன், பிரிவு இணைப் பொறுப்பாளர் வேல்முருகன், மகளிர் அணி பொதுச் செயலாளர்கள் விஜயலட்சுமி, பிரியா உள்ளிட்டோர் மற்றும் தொகுதி தலைவர்கள், மற்றும் 5000க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு எதிர்க்கட்சிகளைகண்டித்து கண்டன கோஷங்கள் எழுப்பினர்.



கடலூரில் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர் ஏபிஆர். பக்த ரட்சகனுக்கு பிறந்தநாளை முன்னிட்டு பொதுமக்கள் 300 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை கடலூர் மாநகராட்சி வண்ணாரபாளையம் 14வது வார்டு முன்னாள் கவுன்சிலர் ஜி .இராஜேந்திரன் மற்றும் இளைஞரணி செயலாளர் ஜி. ஆர் .சைலேஷ் செய்திருந்தனர்..



கடலூரில் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர் ஏபிஆர். பக்த ரட்சகனுக்கு பிறந்தநாளை முன்னிட்டு ஆட்டோ ஓட்டுநர்கள் 50 பேருக்கு சீருடை வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை கடலூர் மாநகராட்சி வண்ணாரபாளையம் 14வது வார்டு முன்னாள் கவுன்சிலர் ஜி .இராஜேந்திரன் மற்றும் இளைஞரணி செயலாளர் ஜி. ஆர் .சைலேஷ் செய்திருந்தனர்..



கடலூரில் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர் ஏபிஆர். பக்த ரட்சகனுக்கு பிறந்தநாளை முன்னிட்டு பெண்கள் 300 பேருக்கு சேலை வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை கடலூர் மாநகராட்சி வண்ணாரபாளையம் 14 வது வார்டு முன்னாள் கவுன்சிலர்ஜி.இராஜேந்திரன் மற்றும் இளைஞரணி செயலாளர் ஜி. ஆர் . சைலேஷ் செய்திருந்தனர்..

# நாகர்கோவிலில் “5 இன் 1 எக்ஸ்போ”



கன்னியாகுமரி, ஏப். 26

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் நகரில் முதன் முறையாக “5 இன் 1 எக்ஸ்போ” FOOD & FANTASY சார்பாக ஆசாரிபள்ளம் சாலையில் உள்ள கண்கார்டியா பள்ளி மைதானத்தில் வைத்து துவக்க விழா நிகழ்ச்சி 24.04.2026 அன்று நடைபெற்றது. இதில் எக்ஸ்போ, பொழுது போக்கு, துபாயின் சரியல் அருவி, வணிகம், உணவு மற்றும் குடும்ப மகிழ்ச்சி என பல்வேறு அம்சங்களை ஒருங்கிணைக்கும் வகையில் மக்களுக்காக சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் பொழுதுபோக்கு விளையாட்டு அம்சங்கள் நிறைந்த ராட்டினங்கள் வணிகக் கண்காட்சி (Shopping Expo), உணவு திருவிழா, Surreal Falls Mermaid நிகழ்ச்சி, Glow Garden நேரடி இசை & DJ இந்த நிகழ்வின் தொடக்க விழாவில் சிறப்பு விருந்தினர்களாக எர்.வி.அசோகன் சாலமன் (முன்னாள் நகராட்சி தலைவர், நாகர்கோவில்) டி. ராஜன் மேனேஜிங் டைரக்டர் (Rajan & Co) மாரி செல்வம் (மேனேஜிங் டைரக்டர், G.R. Furniture), எம். உமாமகேஸ்வரன் (மேனேஜிங் டைரக்டர், M.M Jewellery) டாக்டர். பிரதாப் மோகன் (கண் நிபுணர், Pratap’s Clear Eye Clinic) (ஆர். அருள் ஜோதி வைஸ் சேர்மன், (ரோஜாவனம் இன்டர்நேஷனல் பள்ளி) ஆகியோர் முன்னிலை யில் நடைபெற்றது.



தருமபுரி மாவட்டத்திலுள்ள 5 சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்குப்பதிவு செய்யப்பட்ட வாக்குப்பதிவு மின்னணு இயந்திரங்கள்தருமபுரி மாவட்டம், செட்டிக்கரை அரசு பொறியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கை மையத்தில் தேர்தல் பொது பார்வையாளர்கள் டாக்டர்.ஹீரா லால், வந்தனா வைத்யா, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ் ஆகியோர் தலைமையில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் (24.04.2026) அன்று மூன்றடுக்கு பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டு முத்திரையிடும் (சீல்) பணி நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ்.மகேஸ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் ஆர். கவிதா, அனைத்து சட்டமன்ற தேர்தல் நடத்தும் அலுவலர்கள்) உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

திண்டுக்கல்லில்

# கல்வி & விளையாட்டு மற்றும் அறிவுசார் நுழைவு கண்காட்சி

திண்டுக்கல், ஏப். 26

திண்டுக்கல், MSP ஆடிட்டோரியத்தில் JCI மற்றும் BEvole இணைந்து வழங்கும் கல்வி & விளையாட்டு மற்றும் அறிவுசார் நுழைவு கண்காட்சி நடைபெற்று வருகிறது.

இந்த நுழைவு கண்காட்சியில் பள்ளிகள் மற்றும் பொறியியல், கலை, அறிவியல், மேலாண்மை போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த பல கல்லூரிகள் மற்றும் பள்ளிகள் தங்கள் படிப்புகளை காட்சிப்படுத்தியுள்ளன. இந்த கல்வி மற்றும் விளையாட்டு கண்காட்சியை மெர்சி பவுண்டேஷன் நிறுவனர் மெர்சி செந்தில் குமார் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார்.



இந்நிகழ்வில் கால்பந்தாட்ட கழகம் சண்முகம், தீரஜ், மயில்வாகனம், சூர்யா உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் இக்கண்காட்சியை பற்றி ஒருங்கிணைப்பாளர்கள் சப்ரினா பாத்திமா, நிஷாந்த் ஆகியோர் தெரிவிக்கையில் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்வியாளர்கள் உயர்கல்வி வாய்ப்புகள், புதிய கல்வி தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில் வழிகாட்டுதல்களை ஒரே கூரையின் கீழ் அறிந்துகொள்ளும் வாய்ப்பாக உள்ளது.

திண்டுக்கல் மட்டுமின்றி மதுரை, தேனி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் உள்ள பள்ளி கல்லூரி நிறுவனங்களும் இந்த கண்காட்சியில் இடம் பெற்றுள்ளனர். தங்களது குழந்தைகளுக்கு தேவையான கல்வி மற்றும் விளையாட்டு தொடர்பான தகவல்களை தெரிந்து கொள்ளும் விதமாக இந்த கண்காட்சியானது நடைபெற்று வருகிறது. பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான மாணவ மாணவியர் மற்றும் பெற்றோர்கள் இந்த கண்காட்சியில் கலந்து கொண்டு பல்வேறு தகவல்களை பெற்று செல்கின்றனர். கல்வி மற்றும் விளையாட்டு கண்காட்சியை சப்ரீனா பாத்திமா, நிஷாந்த் மற்றும் முரளி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.



கடலூர் மஞ்சக்குப்பம் சண்முகம் தெருவை சேர்ந்தவர் விக்னேஷ்,கடலூர் மேற்கு மாநகர பா.ஜனதா கட்சி பார்வையாளராக பொறுப்பு வகித்து வருகிறார். இவர் நேற்று காலை வீட்டில் தூங்கி எழுந்து வெளியே வந்த போது, வீட்டின் முன்பு ஒரு கடிதம் இருந்தது. அதன் மீது உப்பு கொட்டப்பட்டிருந்தது. இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த விக்னேஷ், அந்த கடிதத்தை எடுத்து பார்த்த போது, அதில் ‘உன் வீட்டு வாசலில் வெடிகுண்டு வெடிக்கும் அல்லது உனது காரில் வெடிகுண்டு வெடிக்கும். பிள்ளைகளை பத்திரமாக பார்த்துக் கொள். நானும் பாரதிய ஜனதா கட்சி பிரமுகர்தான்' என எழுதப்பட்டிருந்தது. உடனே விக்னேஷ், கடலூர் புதுநகர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்களில் பதிவான காட்சிகளை பார்வையிட்டு,அதன் அடிப்படையில் விசாரணை நடத்தி வருகின்றனர். பாஜக பிரமுகர் வீட்டில் கடிதம் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுத்த சம்பவம் அப்பகுதியில் பெறும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



உலக புகழ் பெற்ற மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் சித்திரைத் திருவிழா நடைபெற்று வருகிறது பத்து நாட்கள் நடைபெறும் இவ்விழாவில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் பிரியாவிடை தினம்தோறும் காலை மாலை வேலைகளில் நான்கு மாசி வீதிகளில் ஒவ்வொரு வாகனத்திலும் வலம் வரும் அந்த வகையில் ஏழாம் நாள் நிகழ்வில் சிவபெருமான் பிட்சாணராக கையில் திருவோடு ஏந்தி நான்கு மாசி வீதிகளில் வலம் வந்தார். இந்நிகழ்வில் திரளான பக்தர்கள் நான்கு மாசி வீதிகளில் திருவோடு ஏந்தி பிட்சாணராக வந்த சிவபெருமானுக்கு காணிக்கை செலுத்தி தரிசனம் செய்தனர். தொடர்ந்து முக்கிய நிகழ்வாக செவ்வாய்க்கிழமை திருக்கல்யாணமும் புதன்கிழமை தேரோட்டமும் நடைபெற உள்ளது.

# பேரளம் அருகே உள்ள கோவிந்தச்சேரியில் கிராமத்தில் ஸ்ரீ மாரியம்மன் ஆலய சித்திரை தீமிதி திருவிழா

திருவாரூர், ஏப். 26–

திருவாரூர் மாவட்டம் நன்னிலம் வட்டம் கோவிந்தஞ்சேரி பகுதியில் எழுந்து அருள் பாலித்து வரும் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலய சித்திரை தீமிதி திருவிழா 17 ந்தேதி காப்பு கட்டுதலுடன் தொடங்கியது.



அதனைத் தொடர்ந்து ஒரு வார காலம் அம்மனுக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று வந்த நிலையில், பக்தர்கள், பெண்கள் குழந்தைகள் என அனைவரும் பால்குடம், காவடிகள் எடுத்து விரதம் இருந்து நேர்த்திக்கடன் செலுத்தினார்கள்.

இந்நிலையில் 24 த்தேதி வெள்ளிக்கிழமை அன்று கோவில் எதிரில் வளர்க்கப்பட்ட தீக்குண்டத்தில் பக்தர்கள் இறங்கி தீமிதி திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

இதில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் தீக்குழி இறங்கி தங்களுடைய வேண்டுதல் நேர்த்திக்கடனை செலுத்தினார்கள். அதனைத் தொடர்ந்து அம்மன் வீதி உலா காட்சியும் இரவு எட்டு மணிக்கு வண்ண வண்ண நிறங்களுடன் கூடிய வாண வேடிக்கை காட்சி பிரம்பியூட்டும் அளவில் நடைபெற்றது .

இதனை பொதுமக்கள் பக்தர்கள் அனைவரும் கண்டு களித்து ரசித்தனர். இந்த நிகழ்வில் கோவில் நிர்வாகிகள் மற்றும் பக்தர்கள், பெண்கள் குழந்தைகள் என அனைவரும் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## இளையான்குடி அருகே கோயிலில் தாக்குதல்:

# 50 பவுன் நகை கொள்ளை- 4 பேர் காயம்

சிவகங்கை, ஏப். 26–

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி அருகே நாகமுகுந்தங்குடி கிராமத்தில் உள்ளநாகநாதர்கோயிலில் சாமி கும்பிட வந்தவர்களை 9 பேர் கொண்ட கும்பல் தாக்கி, சுமார் 50 பவுன் தங்க நகைகளை கொள்ளையடித்து தப்பியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



காளையார் கோயில் அருகே கொல்லாவயல் கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணி (78) தனது உறவினர்களுடன் கோயிலுக்கு வந்திருந்தபோது, 3 இரு சக்கர வாகனங்களில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் அங்கு இருந்த பெண்களை தாக்கி, அவர்கள் அணிந்திருந்த நகைகளை பறித்துச் சென்றனர். தடுக்க முயன்ற ஜேசுதாஸையும் தாக்கி காயப்படுத்தினர்.

இந்த சம்பவத்தில் 4 பேர்காயமடைந்து, இளையான்குடி அரசு மருத்துவமனை மற்றும் சிவகங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் குறித்து இளையான்குடி போலீசார் வழக்குப்பதிவு செய்து, தப்பியோடிய குற்றவாளிகளை தேடி வருகின்றனர்.

# விஐடி பல்கலைக்கழகத்தில் பள்ளி மாணவர்களுக்கு கோடைகால இலவச விளையாட்டு பயிற்சி முகாம்

## ஏப்.27 தொடங்கி மே 20 வரை நடக்கிறது

வேலூர், ஏப். 26–

விஐடி பல்கலைக்கழகத்தில் பள்ளி மாணவர்களுக்கான கோடைகால இலவச விளையாட்டு பயிற்சி முகாம் ஏப்ரல் 27ம் தேதி தொடங்கி மே 20ம் தேதி வரை நடக்கிறது. இதுகுறித்து, விஐடி வேந்தர் கோ.விசுவநாதன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தின் உடற்கல்விதுறை சார்பில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு கோடை கால இலவச விளையாட்டு பயிற்சி ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் இந்த ஆண்டு 20வது கோடைகாலஇலவசவிளையாட்டு பயிற்சி முகாம் வரும் ஏப்ரல் 27ம் தேதி தொடங்கி மே மாதம் 20ம் தேதி வரை நடக்கிறது.




இப்பயிற்சி முகாமில் தடகளம், கூடைப்பந்து, சதுரங்கம், கைப்பந்து, கால்பந்து, எறிபந்து, கராத்தே மற்றும் யோகாசனம் போன்ற பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சி முகாமில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவிகள் கலந்து கொள்ளலாம். முகாமில் சேர எந்தவித கட்டணமும் கிடையாது. சிறந்த பயிற்சியாளர்களை கொண்டு விளையாட்டு பயிற்சி தினமும் காலை 6.30 மணிக்கு தொடங்கி 8.30 மணி வரை நடைபெறும்.

இப்பயிற்சியில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவிகளுக்காக காட்பாடி சித்தூர் பேருந்து நிறுத்தத்தில் இருந்து விஐடி வரை இலவச பேருந்து வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கோடைகால விளையாட்டு பயிற்சி முகாமின் தொடக்க விழா அண்ணா அரங்கம் அருகே உள்ள கூடைப்பந்து மைதானத்தில் ஏப்ரல் 27ம் தேதி காலை 6.30 மணிக்கு நடைபெற உள்ளது என்று தெரிவித்துள்ளார்.



விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வேலூர் சட்டமன்ற தொகுதி மாவட்ட செய்தி தொடர்பாளராக நியமனம் செய்யப்பட்ட சி.சி.விமல் குமார் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவனை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

## மதுரையில் பிரீத்தி மருத்துவமனையின்

# ஒரு மாத கால இலவச இரைப்பை மற்றும் கல்லீரல் முகாம்




மதுரை, ஏப். 26–

மதுரையில் பிரீத்தி மருத்துவமனையின் ஒரு மாத கால இலவச இரைப்பை மற்றும் கல்லீரல் முகாம் வெற்றிகரமாக நடைபெற்றது.

உலக கல்லீரல் தினத்தை முன்னிட்டு, மதுரையில் உள்ள பிரீத்தி மருத்துவமனை, ஏப்ரல் மாதம் முழுவதும்ஒவ்வொருவெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் இலவச இரைப்பை மற்றும் கல்லீரல் முகாமை நடத்தியது. இந்த முகாமை, சிறப்பு அறுவை சிகிச்சை இரைப்பைக் குடல் நிபுணரும் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை நிபுணருமான விக்னேஷ் மணி வழிநடத்தி சிறப்பு மருத்துவர்கள் குழுவுடன் இணைந்து, சிக்கலான செரிமான மற்றும் கல்லீரல் பித்தப்பை கோளாறுகள் உள்ள நோயாளிகளுக்கு நிபுணத்துவ வழிகாட்டுதலை வழங்கினார்.

முழுமையான இரத்த எண்ணிக்கை (CBC), கல்லீரல் செயல்பாட்டு சோதனைகள் (LFT), கல்லீரல் தொற்று பரிசோதனை மற்றும் கொழுப்பு பரிசோதனை உள்ளிட்ட இலவச நோயறிதல் சோதனைகள் மூலம் நோயாளிகள் பயனடைந்தனர்.

வயிற்று அல்ட்ராசவுண்ட் (USG), ஃபைப்ரோஸ்கேன்கள் மற்றும் புரோக்டோஸ்கோபிகள் போன்ற உயர்நிலை நடைமுறைகள், மருத்துவத் தேவையின் அடிப்படையில் தகுதியுள்ள பங்கேற்பாளர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

இந்த முகாமின் மூலம் சுமார் 1400 நோயாளிகள் பயனடைந்தனர். அவர்களில் 250 நோயாளிகளுக்கு இரைப்பைக் குடல் மற்றும் கல்லீரல் பிரச்சினைகள் இருக்கலாம் எனக் கண்டறியப்பட்டது.

50 நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை செய்ய அறிவுறுத்தப்பட்டு, அதற்கான தொடர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். மதுரையில் முதன்முறையாக, கொழுப்பு கல்லீரல் மற்றும் கல்லீரல் ஃபைப்ரோஸிஸ் கண்டறிய 100க்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு இலவசஃபைப்ரோஸ்கேன் பரிசோதனை செய்யப்பட்டது.

## காஞ்சிபுரத்தில்

# லாரி உரிமையாளர்களுக்கு பாதுகாப்பில்லை; சங்க நிர்வாகிகள் காவல் நிலையத்தில் புகார்

காஞ்சிபுரம், ஏப். 26–

காஞ்சிபுரத்தில் தனியாருக்கு சொந்தமான எடை மேடையில் மட்டுமே நெல் மூட்டைகளுடன் கூடிய லாரிகளை எடை போட வேண்டும் என லாரி உரிமையாளர்களை சிலர் மிரட்டுவதால் தங்களுக்கு பாதுகாப்பில்லை என சங்க நிர்வாகிகள் வாலாஜாபாத் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்துள்ளனர்.



காஞ்சிபுரம் மாவட்ட லாரி உரிமையாளர்கள் சங்க தலைவர் ஆர்.வரதன், செயலாளர் வீரபாண்டியன், பொருளாளர் திருநாவுக்கரசு உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் வாலாஜாபாத் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் தெரிவித்திருப்பது.

காஞ்சிபுரத்தில் அரசால் கொள்முதல் செய்யப்பட்ட நெல்மூட்டைகளை லாரிகளில் ஏற்றிய பிறகு எடைமேடையில் எடை போட்டு அரசு நெல் சேமிப்புக் கிடங்கிற்கு கொண்டு போய் சேர்க்க வேண்டும். செல்லும் வழியில் அரசு எடை மேடையில் லாரிகளை எடை போடாமல் தனியாருக்கு சொந்தமான எடை மேடையில் தான் லாரிகளை எடை போட வேண்டும் என சிலர் கட்டாயப்படுத்துகிறார்கள். தனியார் எடை மேடையில் லாரிகளை எடைபோடும் போது எடையை குறைத்துக் காட்டி லாரி உரிமையாளர்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துகின்றனர். அரசுக்கும் பல லட்சங்கள் வருவாய் இழப்பு ஏற்படுகிறது.

இது குறித்து நெல் கொள்முதல் நிலைய அதிகாரிகளிடம் பலமுறை தெரிவித்தும் எந்த பயனும் இல்லை.

இந்த நிலையில் புதியதாக அரசால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட நத்தாநல்லூர் எடைமேடைக்கு சென்று லாரிகளை எடை போட முயன்ற போது லாரி உரிமையாளர்கள் மிரட்டப்படுகிறார்கள். எனவே எங்களது லாரிகளுக்கும், அதில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கும் பாதுகாப்பில்லை.

போதுமான பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று வாலாஜாபாத் காவல் நிலையத்தில் புகார் செய்திருப்பதாக சங்க நிர்வாகிகள் அப்புகார் மனுவில் தெரிவித்துள்ளனர்.




மதுரை திருமங்கலம் நான்கு வழி சாலை கப்பலூர் சிட்கோ தொழிற் பேட்டையில் தனியார் டயர் நிறுவனத்தில் ஊழியர்கள் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது இரண்டு தலை கொண்ட மண்ணுளிப்பாம்பு ஊர்ந்து சென்றதை கண்ட ஊழியர்கள் மேலாளரிடம் தகவல் தெரிவிக்கவே வினோத் என்னும் ஊழியர் அதை பத்திரமாக பிடித்து வனத்துறைக்கு தகவல் தெரிவித்தார். பின்னர் பசுமலை அருகே உள்ள வன அலுவலர்களிடம்இரண்டுதலைகொண்டமண்ணுளிப்பாம்பு ஒப்படைக்கப்பட்டது. யாருக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படாமல்மண்ணுளிப்பாம்பைகைப்பற்றிவனத்துறையினர் பசுமலை காப்பு காட்டில் விட்டனர்.

## கன்னியாகுமரி மாவட்டத்தில்

# பெண்ணை குளத்தில் மூழ்கடித்து கொலை செய்தவருக்கு ஆயுள் தண்டனை

கன்னியாகுமரி, ஏப். 26–

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 7/02/2021 தேதி அன்று திருவட்டார் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட வெட்டுக்காட்டு விளை பகுதியை சேர்ந்த செல்லம் என்பவரது மகன் மெர்லின் என்ற மெர்லின் ராஜ் (42) என்ற குற்றவாளி உம்மன்கோடு புன்னத்து விளையை சேர்ந்த வின்செண்ட் என்பவரது மனைவி மேரி ஜெய அமுதா (48) என்பவர் வெட்டுக்காட்டு விளையில் இருக்கும் ரேசன் கடைக்கு சென்று விட்டு தனது வீட்டிற்கு திரும்பி வரும்போது அவரை வழி மறித்து கழுத்தில் கிடந்த ஒன்றரை பவுன் தங்கச் செயினை பறிக்க முயன்ற போது சம்பவத்தை நேரில் பார்த்து தடுக்க சென்ற தேவதாஸ் என்பவரை கையால் தாக்கி தள்ளி விட்டு மேற்படி மேரி ஜெய அமுதாவை குளத்தில் மூழ்கடித்து கொன்று தங்கச் செயினை பறித்து சென்றுவிட்டார்.



இது சம்பந்தமாக திருவட்டார் காவல் நிலையத்தில் Cr.No 49/2021 U/S 392, 302 IPC ன்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கு விசாரணையானது நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இந்நிலையில் இந்த வழக்கு சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளியான வெட்டுக்காட்டு விளையை சேர்ந்த செல்லம் என்பவரது மகன் மெர்லின் என்ற மெர்லின் ராஜ் என்பவருக்கு ஆயுள் தண்டனை மற்றும் அபராதம் விதித்து தீர்ப்பளி க்கப்பட்டது.

குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தருவதில் தீவிரமாக செயல்பட்ட பொது வழக்கறிஞர், முன்னாள் விசாரணை அதிகாரி, தற்போதைய விசாரணை அதிகாரி மற்றும் நீதிமன்ற அலுவல் காவலர் ஆகியோர்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர்இராஸ்டாலின் வெகுவாக பாராட்டினார்.



மதுரை சித்திரை திருவிழாவையொட்டி பக்தர்களின் வசதிக்காக கூடுதலாக 125 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்றும், பாதுகாப்பு பணியில் 2,000 காவல்துறையினர் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் மதுரை மாவட்ட ஆட்சியர் பிரவீன் குமார் அறிவித்துள்ளார். ஏப்.19ம் ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கிய சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்வுகளான மீனாட்சி திருக்கல்யாணம் (ஏப்.28) மற்றும் கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளும் (மே.1) நிகழ்வுகளுக்காக தீவிர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## நிதி ஆயோக் துணை தலைவராக பாஜ எம்எல்ஏ லஹிரி நியமனம்: 5 நிரந்தர உறுப்பினர்கள் தேர்வு

புதுடெல்லி: நிதிஆயோக்துணைத் தலைவராக மேற்கு வங்க பாஜ எம்எல்ஏ அசோக்குமார் லஹிரி நியமிக்கப்பட்டுள்ளார். அவருடன் 5 நிரந்தர உறுப்பினர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். நாட்டின் வளர்ச்சிக்கான கொள்கைகளை வகுக்கவும், ஒன்றிய அரசுக்கு கொள்கை ஆலோசனைகளை வழங்கவும், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே ஆக்கப்பூர்வமான உறவை வளர்க்கவும் நிதி ஆயோக் அமைக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக பிரதமர் மோடி உள்ளார். கடந்த 2022ல் துணைத்தலைவராக நியமிக்கப்பட்ட சுமன் பெரியின் 5 ஆண்டு பதவிக்காலம் அடுத்த ஆண்டு முடிவடைய உள்ளது.

இந்நிலையில், நிதி ஆயோக் அமைப்பின் புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி துணைத்தலைவராக அசோக் குமார் லஹிரியும், 5 நிரந்தர உறுப்பினர்களாகவிஞ்ஞானிகோபர்தன் தாஸ், முன்னாள் அமைச்சரவை செயலாளர் ராஜீவ் கவுபா, பொருளாதார நிபுணர் கே.வி.ராஜு, தொழில்நுட்பத் துறை செயலாளர் அபய கரண்டிகர், எய்ம்ஸ் இயக்குநர் எம். ஸ்ரீனிவாஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் மோடி நேற்று தெரிவித்தார். இது குறித்து பிரதமர் மோடி எக்ஸ் தளத்தில் துணைத்தலைவர் லஹிரி மற்றும் உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

துணைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ள லஹிரி தற்போது மேற்கு வங்க மாநில பலூர்காட் தொகுதி பாஜ எம்எல்ஏவாக உள்ளார். இம்முறை சட்டப் பேரவை தேர்தலில் அவர் போட்டியிடவில்லை. மேலும், 15வது நிதிக்குழுவின் உறுப்பினராகவும் ஒன்றிய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகராகவும் பணியாற்றிய அனுபவம் மிக்கவர். ஆசிய மேம்பாட்டு வங்கி,

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றிலும் பணியாற்றி மூத்த பொருளாதார வல்லுநர்களில் ஒருவராக லஹிரி திகழ்வதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. கொல்கத்தாவை சேர்ந்த லஹிரி டெல்லி பொருளாதார பள்ளியிலும், பிரசிடென்சி பல்கலைக்கழகத்திலும் படித்துள்ளார்.

நிதிஆயோக்துணைத் தலைவராக தேர்வு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அசோக்குமார் லஹிரி நேற்று பிரதமர் மோடியை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். லஹிரிதனது எக்ஸ் பதிவில், ''இன்று என் வாழ்வில் மிக முக்கியமான நாள். மேற்கு வங்கத்தின் தொலைதூர கிராமத்தை சேர்ந்த தலித் சமூகத்தை சேர்ந்த, சாதாரண விவசாய குடும்பத்தின் மகன் நான். சிறுவயதுமுதலே மண் வாசனை, கடின உழைப்பின் மதிப்பு மற்றும் போராட்டத்தின் உண்மை ஆகியவை என் வாழ்வின் பிரிக்க முடியாத அங்கங்களாக இருந்து வருகின்றன. எனக்கு வழங்கப்பட்டுள்ள இந்த பொறுப்பு, வெறும் பதவி மட்டுமல்ல.

என்னைப் போன்ற எண்ணற்ற சாதாரண மக்களின் கனவுகள், நம்பிக்கைகள் மற்றும் லட்சியங்களின் பிரதிபலிப்பாகும்'' என கூறி உள்ளார்.



## பாக்.கில் இருந்து ஈரான் வெளியுறவு அமைச்சர் புறப்பட்டார் அமெரிக்காவுடன் நேரடி பேச்சுவார்த்தை இல்லை: ஈரான் அறிவிப்பு

அமெரிக்க பிரதிநிதிகளை சந்திக்காமலேயே ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி பாகிஸ்தானில் இருந்து நேற்று புறப்பட்டார். அமெரிக்காவுடன் நேரடி பேச்சுவார்த்தை நடத்த தயாராக இல்லை என ஈரான் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. அமெரிக்காஈரான் இடையே கடந்த 8ம் தேதி 2 வார கால போர் நிறுத்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து இரு தரப்பிலும் முதல்கட்ட அமைதி பேச்சுவார்த்தை பாகிஸ்தானில் நடந்தது. இந்த பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து, போர் நிறுத்தத்தை காலவரையின்றி நீட்டித்து அமெரிக்க அதிபர் டிரம்ப் உத்தரவிட்டார்.

இதைத் தொடர்ந்து, இருதரப்பிலும் 2ம் கட்ட பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்ய பாகிஸ்தான் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி நேற்றுமுன்தினம் இரவு பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்திற்கு பயணம் மேற்கொண்டார். அதைத் தொடர்ந்து, அமெரிக்காவின் சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காப் மற்றும் டிரம்பின் ஆலோசகர் ஜெரெட் குஷ்னர் இருவரும் ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்த நேற்று பாகிஸ்தானுக்கு புறப்படுவதாக தகவல்கள் வெளியாகின. நேரில் சந்தித்து பேச வேண்டும் என ஈரானே அமெரிக்காவை கேட்டுக் கொண்டதால், பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகள் நடப்பதாக வெள்ளை மாளிகையின் ஊடக செயலாளர் கரோலின் லீவிட் கூறினார்.

இதனால் 2ம் கட்ட பேச்சுவார்த்தை நேற்று நடக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், ஈரான் வெளியுறவு அமைச்சகம் இத்தகவலை திட்டவட்டமாக மறுத்தது. அமெரிக்காவுடன் எந்த நேரடி பேச்சுவார்த்தைக்கும் ஈரான் தயாராக இல்லை என்றும், ஈரானின் கருத்துக்கள் பாகிஸ்தானிடம் தெரிவிக்கப்படும் என்றும் ஈரான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். அதே போல, இஸ்லாமாபாத்தில் ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ்அராக்சி, பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், ராணுவ தளபதி பீல்ட் மார்ஷல் ஆசிம் முனீர் மற்றும் பிற அதிகாரிகளை நேற்று சந்தித்து பேசினார்.

இதன் பின்னர், அப்பாஸ் அராக்சி குழுவினர் இஸ்லாமாபாத்தில் இருந்துநேற்றுபிற்பகலில் புறப்பட்டு சென்றனர். இதனால் இன்று 2ம் கட்ட பேச்சுவார்த்தை நடக்காது என்பது உறுதியாகி உள்ளது. இஸ்லாமாபாத்தில் நடந்த சந்திப்பில், போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பான கோரிக்கைகளை ஈரான் வெளியுறவு அமைச்சர் அராக்சி முன்வைத்துள்ளதாக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார். இந்த பேச்சுவார்த்தை இணக்கமான பரிமாற்றமாக இருந்ததாக அவர் கூறி உள்ளார். அதே சமயம் பாகிஸ்தானின் மத்தியஸ்த முயற்சிகளை தொடர ஈரான் விருப்பம் தெரிவித்துள்ளதாக ராணுவ தளபதி முனீர் கூறி உள்ளார். ஈரான் துறைமுகங்கள் மீதான முற்றுகை நீடிக்கும் வரையிலும் அமெரிக்காவுடன் நேரடி பேச்சுவார்த்தை நடத்துவதில்லை என்பதில் ஈரான் மிக உறுதியாக உள்ளது. அதே சமயம், பாகிஸ்தான் மூலமாக அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருக்கிறது. இதற்கு அதிபர் டிரம்ப் ஏற்பாரா என்பது கேள்விக்குறியாக உள்ளது.



ஈரான் வெளியுறவு அமைச்சர்அராக்சிபாகிஸ்தானில் இருந்து நேற்று புறப்பட்டுச் சென்ற சில மணி நேரத்தில் அமெரிக்க குழு பாகிஸ்தானுக்கு அனுப்பப்படாது என அதிபர் டிரம்ப் அறிவித்தார். பாக்ஸ் நியூஸ் சேனலுக்கு அவர் அளித்த பேட்டியில், ''பாகிஸ்தானுக்கு செல்ல வேண்டாம் என அமரிக்க உயர்மட்ட தூதர்களிடம் கூறி உள்ளேன். ஈரான் விரும்பும் எந்த நேரத்திலும் எங்களை அழைக்கலாம்'' எனகூறி உள்ளார். இஸ்ரேலின் உளவு நிறுவனமான மொசாட் அமைப்புடன் தொடர்பு இருந்ததாகவும், ஜனவரியில் நடந்த அரசு எதிர்ப்பு போராட்டங்களில் பங்கேற்றதாகவும் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் ஈரான் நேற்று கியானி என்பவருக்கு மரண தண்டனையை ஈரான் நிறைவேற்றியது

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரானுக்கு இடையே இரண்டு மாதங்களுக்கு முன் போர் தொடங்கியதில் இருந்து விமான சேவைகள் நிறுத்தப்பட்டன. இந்த மாத தொடக்கத்தில் போர் நிறுத்தம் ஏற்பட்ட பின்னர் ஈரான் பகுதியளவு வான் வெளியை திறந்திருந்தது. விமான சேவையை தொடங்கியது. இந்நிலையில் வர்த்தக விமான சேவையையும் ஈரான் தற்போது தொடங்கி உள்ளது.

## மே தினம் கொண்டாட்டங்களுக்கு அனுமதி வேண்டும்: தேர்தல் ஆணையத்துக்கு தொழிற்சங்கங்கள் கடிதம்

சென்னை: தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச்செயலாளர் ம.இராதாகிருஷ்ணன் மற்றும் சிஐடியு பொதுச்செயலாளர் எஸ்.கண்ணன் ஆகியோர் தலைமை தேர்தல் அதிகாரிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் மேதினத்தையொட்டி ஆண்டுதோறும் தொழிற்சங்கங்கள் சார்பில் காலையில் கொடியேற்றுதல், மேதினப் பூங்காவில் அஞ்சலி செலுத்துதல் மற்றும் மாலையில் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்துவது வழக்கம்.

இந்நிலையில் தமிழகத்தில் தற்போது வாக்குப்பதிவு முடிந்துவிட்ட போதிலும், தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்குப்பதிவுக்கு முன்னும், பின்னும் பல மதங்களின் திருவிழாக்கள், சமூக அமைப்புகளின் செயல்பாடுகள் அனுமதிக்கப்படும் நிலையில், தொழிற்சங்கங்களை மட்டும் அரசியல் கட்சிகளைப் போல அதிகாரிகள் கருதுவது கவலை அளிக்கிறது.

பிரச்சாரமாக பார்க்கக் கூடாது: தேர்தல் காரணங்களுக்காக கொடிமரங்கள் எல்லாம் அகற்றப்பட்டுள்ளன. தேர்தல் முடிந்துவிட்ட சூழலில் மே தின கொண்டாட்டங்களை ஒரு பிரச்சாரமாக பார்க்கத் தேவையில்லை. எனவே, தொழிலாளர்கள் தங்களது உரிமையை நிலைநாட்டு வகையில், மே 1ம் தேதி கொடிமரங்களை நடவும், கொடியேற்றவும், ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்களை தொழிற்சங்கங்கள் எவ்வித தடையுமின்றி நடத்தவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்க வேண்டும். இவ்வாறு கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.



கடலூர் இம்பீரியல் சாலையில் அமைந்துள்ள உழவர் சந்தை எதிரில் சிறு சிறு வியாபாரிகள் சாலையில் கடைகளை வைத்துக்கொண்டு போக்குவரத்திற்கு இடையூறாக இருந்து வருகின்றனர். இதனால் சாலையில் செல்லும் நடைபாதை பொதுமக்களும்இரண்டுசக்கரவாகனங்கள்நான்குசக்கரவாகனங்களில்செல்லும்லாரிபஸ்இவைகளால்போக்குவரத்திற்கு இடங்களாகவும் விபத்துகள் ஏற்படும் அபாயம் உள்ளதாலும் சாலையில் வாகனங்கள் செல்ல முடியாத சூழ்நிலை உள்ளதால் உடனடியாக உழவர் சந்தை அதிகாரிகளும் காவல்துறையினரும் மாநகராட்சி அலுவலர்களும் சரி செய்து விபத்துகளை தவிர்க்க நடவடிக்கை எடுக்க சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

## அதிமுகவினரை தாக்கிய திமுகவினர் மீது நடவடிக்கை தேவை: பழனிசாமி

சென்னை: 'உடுமலைப்பேட்டை, கிருஷ்ணகிரியில் அதிமுக செயல் வீரர்கள் மீது திமுகவினர் தாக்குதல் நடத்தியது மிகவும் கண்டிக்கத்தக்கது' என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத் தேர்தலில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மகத்தான வெற்றிபெற வேண்டும் என்பதற்காக அயராது பாடுபட்ட கட்சி நிர்வாகிகள் மீதும், தொண்டர்கள் மீதும், திமுகவினர் தாக்குதல் நடத்தியதாக செய்திகள் வருகின்றன. இந்தப் போக்கு மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்.

குறிப்பாக, உடுமலைப் பேட்டை தொகுதி, பொள்ளாச்சி தெற்கு (கிழக்கு) ஒன்றியம், தொண்டாமுத்தூர் தோட்டத்து சாலையில் வசிக்கும் கட்சி நிர்வாகி மாரிமுத்து என்பவர், 24.4.2026 அன்று தனது மாற்றுத் திறனாளி மகனை பள்ளியில் இருந்து வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் அழைத்துச் செல்லும்போது, பொள்ளாச்சி தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் கதிர்வேல் என்பவர், தேர்தல் நாளன்று தனக்கு எதிராக பணியாற்றியதை சுட்டிக்காட்டி, தான் ஓட்டி வந்த காரை, கழக நிர்வாகி மாரிமுத்துவின் இருசக்கர வாகனத்தின் மீது கொலை வெறியுடன் மோதியுள்ளார். இதில் மாரிமுத்துவும், அவரது மகனும் இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்து படுகாயமடைந்துள்ளனர்.

அப்போது, அவ்வழியாக நான்கு சக்கர வாகனத்தில் வந்த அருண், ஜெகநாதன், சுகுமார் மற்றும் தங்கராஜ் ஆகியோர், படுகாயமடைந்த மாரிமுத்துவையும், அவரது மகனையும் மீட்டு மருத்துவமனையில் சேர்ப்பதற்கு, தொண்டாமுத்தூர் அரசு பள்ளி அருகே உள்ள பேருந்து நிலையத்திற்கு அருகில் செல்லும்போது, திமுக ஒன்றியச் செயலாளர் கதிர்வேல், அவரது மனைவி பானுமதி, அவரது தந்தை கோபால்சாமி மற்றும்திமுகவைச்சேர்ந்த செந்தில்குமார் உள்ளிட்ட சிலர், அருண் ஓட்டி வந்த நான்கு சக்கர வாகனத்தை உடைத்து சேதப்படுத்தியதுடன், காப்பாற்றிய நால்வர் மீதும் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். படுகாயமடைந்த கட்சி நிர்வாகி மாரிமுத்து மற்றும் அவரது மாற்றுத் திறனாளி மகன் இருவரும் பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். அதேபோல், கிருஷ்ணகிரி தொகுதியில், கழகத்தின் சார்பில் இதயாத் என்பவர் 1வது வார்டு வாக்குச் சாவடி முகவராக நியமிக்கப்பட்டு தீவிர தேர்தல் பணியாற்றி வந்த நிலையில், காழ்ப்புணர்ச்சி காரணமாக அவரை திமுகவினர் தாக்கியுள்ளனர். காயமடைந்த இதயாத், கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பி உள்ளார். சிகிச்சை பெற்றுவரும் கழக நிர்வாகிகள், விரைவில் பூரண நலம் பெற்று வீடு திரும்ப, எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஆட்சி முடியும் நேரத்தில்கூட, விரக்தியின் விளிம்பில் உள்ள திமுகவினர் செய்யும் அடாத செயல்கள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. தாக்குதலில் ஈடுபட்ட திமுக நிர்வாகிகள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்க காவல் துறை தலைமை இயக்குனரை வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.



## ஹூக்ளி நதியில் படகு சவாரி செய்த மோடி



கொல்கத்தா: மேற்கு வங்கத்தின் ஹூக்ளி நதியில் படகு சவாரி செய்தார் பிரதமர் மோடி.

கடந்த 19ம் தேதி மேற்கு வங்கத்தின் ஜார்கிராம் பகுதியில் பிரதமர் மோடி பிரச்சாரம் செய்தார். தலைநகர் கொல்கத்தாவில் கங்கையின் கிளை நதியான ஹூக்ளியில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று படகு சவாரி செய்தார்.

படகோட்டி கவுரங்கா பிஸ்வாஸ், படகினை ஓட்டினார். அவருக்கு பிரதமர் மோடி ரூ.1,000 வழங்கினார். கரைதிரும்பிய பிறகு அவரை ஆரத் தழுவி பாராட்டினார். இதுதொடர்பான புகைப்படங்களை அவர் சமூக வலைதளங்களில் வெளியிட்டு உள்ளார். அவர் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: மேற்குவங்க மக்களின் வாழ்க்கையில் கங்கை மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த புனித நதி மேற்குவங்கத்தின் கலாச்சாரத்தோடு பின்னிப் பிணைந்திருக்கிறது. தலைநகர் கொல்கத்தாவில் ஹூக்ளி நதியில் சிறிது நேரம் படகு சவாரி செய்தேன்.

இதன் மூலம் அன்னை கங்கைக்கு மரியாதை செலுத்தினேன். படகோட்டியின் கடினமான வாழ்க்கை நடைமுறைகளை கேட்டு அறிந்தேன். மேற்குவங்கத்தின் வளர்ச்சி, மக்களின் செழிப்புக்காக பாஜக அயராது பாடுபடும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். பிரதமர் நரேந்திரமோடியின் படகு சவாரி புகைப் படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகின்றன.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJAV. CALL: 044-22772060,9443699066